**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை–18.**

அனுப்புநர்
திரு. ம. அந்தோணிசாமி ஜான் பீட்டர், எம்.எஸ்சி, எச்.டி.சி.எம்.,
செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு),
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை-600 018.

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும்
அனைத்து செயற்பதிவாளர்கள்

**ந.க.344/2018/கூ.தே.5** **நாள்: 05.03.2018**

**ஐயா,**

**பொருள்:** கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் – தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தல் – தொடர்பாக.

**பார்வை:** தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் செயல்முறை ஆணை ந.க.329/2018/கூ.தே.1, நாள்: 05.03.2018

-----

பார்வையில் காணும் செயல்முறை ஆணையின் மூலம் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஆணையத்தால் அத்தேர்தல்களுக்காக தேர்தல் நடத்தை விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. உடனே அமல்படுத்தும் பொருட்டு அவ்விதிகள் தக்க நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒம்/–)**
செயலாளர் (மு.கூ.பொ.)

**இணைப்பு:** தேர்தல் நடத்தை விதிகள்

# கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் – 2018
## நடத்தை விதிகள் அறிவிப்பு

**முன்னிலை : டாக்டர் மு. ராஜேந்திரன், இ.ஆ.ப.,**
**ஆணையர்.**

ந.க.344 /2018 / கூ.தே.5 நாள்: 05.03.2018

**பொருள்:** கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் – கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் நடத்தை விதிகள் (Code of Conduct)

---

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள்1988, விதி எண். 52(9).ல் அதிகாரமளிக்கப்பட்டபடி கூட்டுறவுச் சங்கத்தின் தேர்தல்களை நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுவதற்கு தமிழ்நாடு மாநில கூட்டுறவு சங்கத் தேர்தல் ஆணையம் கீழ்காணும் தேர்தல் நடத்தை விதிகளை அறிவிக்கிறது.

1) சங்கம் நடத்துவது தொடர்பான வாடிக்கையான நடவடிக்கைகள் (Usual Business) தவிர்த்து கொள்கை முடிவுகள் ஏதும் (No Policy decision) நிர்வாகக்குழு எடுத்தல் கூடாது.

2) சங்கத்தின் பொதுப்பேரவைக் கூட்டம் கூட்டுதல் கூடாது.

3) புதிய கிளைகள் ஏதும் தொடங்குவது கூடாது.

4) சங்க உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நிதி சலுகைகள் (Financial Benefit) ஏதும் வழங்கக் கூடாது.

5) கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் தொடர்பான புதிய நியமன ஆணைகள், பணியிட மாறுதல்கள், பதவி உயர்வு ஆணைகள் ஏதும் வழங்கக்கூடாது.

6) நிர்வாகக்குழு உறுப்பினர்கள், தலைவர் / துணைத் தலைவர் ஆகியோருக்கு சங்கத்திலிருந்து வாகனங்கள், வழங்கப்பட்டிருப்பின் அவை திரும்பப் பெறவேண்டும்.

இத்தேர்தல் நடத்தை விதிகள் தேர்தல் திட்டம் வெளியிடப்பட்ட சங்கங்களுக்கு மட்டும் பொருந்தும். தேர்தல் திட்டம் வெளியிட்ட நாளிலிருந்து புதிய நிர்வாகக்குழு பொறுப்பேற்கும் வரை இந்த நடத்தை விதிகள் அமலில் இருக்கும்.

(ஒம்/–)
ஆணையர்